**கந்தளாய் பிரதேச சபை**
**திருகோணமலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2015 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஜூன் 30 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 செப்தெம்பர் 21 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2015 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தெம்பர் 30 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து கந்தளாய் பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஒப்பந்தக்காருக்குச் செலுத்த வேண்டிய தடுத்து வைத்தல் பணம் ரூபா 3,176,858 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) நகர அபிவிருத்தி அதிகார சபையினால் 2013 ஆண்டின் போது சபைக்கு ஒப்படைக்கப்பட்ட 66 கடைகளை கொண்ட பொதுச் சந்தைக் கட்டிடத்தில் மற்றும் 24 கடைகளைக் கொண்ட பஸ் தரிப்பு நிலையக் கட்டிடத்தின் பெறுமதியினை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) ஆண்டின் போது செலுத்தியிருந்த கடன் தவணைப் பணமாகிய ரூபா 811,267 தொகை உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு வரவு வைத்து அந்த கணக்கின் வித்தியாசத்தை திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் மேற்கொள்ளப்பட்டதினால் திரண்ட நிதியக் கணக்கின் மீதி ரூபா 101,385 தொகை குறைவாகவும் உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் மீதி ரூபா 101,385 தொகையினால் மிகையாகவும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) ஆண்டிற்கான கடன் வட்டியாகிய ரூபா 284,182 தொகையினை திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் செய்யப்பட்டதினால் மீளாய்வாண்டிற்கான செலவுகள் அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) உள்ளுராட்சி ஓய்வூதியப் பங்களிப்பு நிதியத்திற்கு 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய தொகை ரூபா 236,989 தொகை எனினும் அதனை நிதிக்கூற்றுக்களில் ரூபா 204,960 என காட்டப்பட்டிருந்தது.

#### 1.3.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களின் தொடர்பு | | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 1980/22 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி | நிலுவை வருமானம் தொடர்பாக காலப்பகுப்பாய்வு ஒன்று தயாரித்திருக்கவில்லை. |
| (ஆ) | மாகாண நிதி விதி 267(5) | நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்படவில்லை. |
| (இ) | இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் நி.பி. 751 | 2015 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 130,715 இற்கான எரிவாயு சிலின்டர் மற்றும் தளபாட உபகரணங்கள் என்பன பண்டங்கள் பதிவேட்டில் உட்படுத்தியிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

2015 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 90,206 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,405,689 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பீட்டு வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீதவரி மற்றும் வரி | 1,700 | 2,664 | 9,850 |
| குத்தகை | 6,710 | 3,028 | 1,824 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,043 | 1,265 | 82 |
| ஏனைய வருமானங்கள் | 36,416 | 35,227 | 3,488 |

#### 2.2.2 முத்திரைக் கட்டணம்

கிழக்கு மாகாண சபை பிரதான செயலாளரிடம் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முத்திரைக் கட்டணமாக கிடைக்க வேண்டிய தொகையினை இனங்காண்பதற்கு மற்றும் அதனை பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வுத் திகதியாகிய 2016 ஆகஸ்ட் 02 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

(அ) 2011 ஆண்டின் போது 32 பழைய கடைகளை உடைத்து அகற்றிவிட்டு புதிய பொதுச் சந்தையில் 66 கடைகள் மற்றும் பஸ் தரிப்பு நிலையத்தில் 24 கடைகளை நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணவேலை பூர்த்தி செய்யப்பட்டு 2013 மார்ச் 27 திகதி பிரதேச சபைக்கு ஒப்படைத்திருந்த போதிலும் இந்த 90 கடைகளும் சபைக்கு உரித்தாக்கிய நாள் முதல் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) சபையின் கடமையாற்றிய சேவையை இராஜினாமா செய்த மற்றும் சேவையை விட்டு நீக்கிய மூன்று ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன் ரூபா 1,253,400 தொகையினை தாபனக் கோவையின் அத்தியாயம் XXIV இன் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 1993 நவம்பர் 18 திகதி நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வெளியிடப்பட்ட திட்டமிடல் சுற்றறிக்கை இலக்கம் 15 இன் பிரகாரம் அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகளுக்காக சேவைக் கட்டணம் அறவீடு செய்வதற்காக இலங்கை வங்கியில் அல்லது மக்கள் வங்கியில் கணக்கு ஒன்று ஆரம்பித்து அதற்கு செலவு வைக்கப்பட வேண்டுமெனினும், சபையினால் அப் பணம் பொதுக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

(ஈ) 1988 இன் 56 ஆம் இலக்க 2000 இன் 53 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க சட்டத்தின் 23 ''அ'' பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய சபையின் அதிகாரப் பிரதேசத்தில் செயற்படும் தச்சு வேலைத் தளங்கள், நெல் ஆலைகள், சீமெந்து பண்டங்கள் உற்பத்தி செய்யும் வியாபாரங்கள் தொடர்பாக முறையான கணிப்பீடு ஒன்றின் மூலம் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்காமல் வர்த்தக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

### 3.2 முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 132(ஒ) மற்றும் (ஓ) பிரிவுகளின் பிரகாரம் பொதுமக்களின் உல்லாச விடயங்கள் மற்றும் பொழுதுபோக்கு விடயங்களுக்காக மேற்கொள்ளப்படும் நிதி மற்றும் பண்ட உதவிகளின் பெறுமதி ஒரு வருடத்திற்கு மொத்தக் கூட்டுத்தொகை ஒரு ஆயிரத்தினை விஞ்சுமிடத்து விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் பூர்வாங்க அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டுமெனினும், அவ்வாறான அங்கீகாரமின்றி 05 சந்தர்ப்பங்களில் ரூபா 134,664 இற்கான உதவி வழங்கியிருந்தது.

### 3.3 வாகனப் பயன்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 8 வாகனங்களுக்காக சபையினால் நடைமுறையாண்டிற்காக வருமான அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை.

(ஆ) சபையின் வாகனங்களுக்கான சம்பவக் குறிப்பேடுகளில் வாகனங்கள் பற்றிய விபரம், எரிபொருள் எரியும் அளவு, வருடாந்த அனுமதிப்பத்திரம், ஆயுதங்கள் மற்றும் மேலதிக உபகரணங்கள் மற்றும் பிரயாணங்கள் பற்றிய மாதாந்த பொழிப்பு ஆகிய விபரங்கள் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 ஜூன் 14 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 04/2015 இன் பிரகாரம் மோட்டார் வாகனங்களுக்காக காப்புறுதி பாதுகாப்பு பெற்றுக்கொள்ளும் போது அரசாங்கத்துக்கு சொந்தமான நிறுவனங்களில் இருந்து நேரடியாக பெற்றுக்கொள்ள வேண்டும். எனினும் சபையினால் காப்புறுதி முகவர் ஒருவரின் மூலமாக 06 வாகனங்களுக்காக காப்புறுதி பாதுகாப்பு பெற்றிருந்தது.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---

**3.4.1 குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1997 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த வான் வண்டி 2013 நவம்பர் மாதம் முதலும், 1987 இல் கொள்வனவு செய்த டிரக்டர் வண்டி 2012 ஏப்ரல் முதலும், 2008 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த கப் வண்டி 2015 ஜூன் மாதம் முதலும் செயற்படாமல் வாகனத் தளத்தில் நிறுத்தப்பட்டு காணப்பட்ட போதிலும் அது தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபையின் பேரில் இலங்கை வங்கியில் பேணப்படுகின்ற இரண்டு நடைமுறை கணக்குகளில் ரூபா 362,360 தொகை எதுவித கொடுக்கல் வாங்கல்களும் இன்றி 2013 ஆண்டு முதல் 2016 ஏப்ரல் 29 திகதி வரை செயற்படாது காணப்பட்டதுடன் இந்தப் பணத்தை முதலீடு செய்து வருமானம் உழைத்தல் தொடர்பாக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(இ) சபையினால் இலங்கை தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிலையத்தின் அனுசரணையுடன் 2014 ஆண்டு முதல் நடத்தப்பட்டு வந்த நெசனல கணனி நிலைய பெண் உத்தியோகத்தர் வராமையின் காரமான 2015 ஆண்டு முதல் மூடப்பட்டிருந்தது. இதன் காரணமாக அதற்காக கிடைத்திருந்த கணனிகள், தளபாடங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டதுடன் கிராமப்புர பிள்ளைகளுக்கு தகவல் தொழிநுட்ப அறிவை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

**3.4.2 பண்டக் கணிப்பீடு**

---

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) 2015 ஆண்டிற்கான பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் 05 நூலகங்கள் தொடர்பாக காணாமல் போனவை என இனங்காணப்பட்ட 3721 புத்தகங்கள் தொடர்பாக 2016 ஆகஸ்ட் 02 ஆம் திகதி வரை உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2014 ஆண்டிற்கான பண்டக கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் பிரதேச சபைக்கு சொந்தமான 11 இடங்கள் தொடர்பாக காணப்படும் அனைத்து பண்ட விடயங்களும் புதிய கணனிப் பதிவேட்டின் பிரகாரம் அகர வரிசையில் இலக்கம் இடப்பட்டு அதன் பிரகாரம் பண்டப் பதிவேட்டினை மீண்டும் தயாரிப்பதற்காக 2016 ஆகஸ்ட் 02 திகதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.5 ஒப்பந்த நிருவாகம்**

---

**3.5.1 பல்கரும கட்டிடம் நிர்மாணித்தல்**

---

சபை 2014 மார்ச் 18 ஆம் திகதி ரூபா 51,093,960 தொகைக்கான ஒப்பந்தப் பெறுமதிக்கு பல்கரும கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை

கையொப்பமிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

(அ) கட்டிடம் நிர்மாணிக்கும் போது வேலைத் தளத்தில் அலுவலகம் ஒன்று நடத்துவதற்காக சபையினால் ரூபா 469,750 தொகை ஒன்று செலுத்தியிருந்த போதிலும் அவ்வாறான அலுவலகம் ஒன்று அல்லது உபகரணங்கள் 2016 ஆகஸ்ட் 02 திகதி வரையும் கணக்கிடக் கூடியதாக இருக்கவில்லை.

(ஆ) ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் உடன்படிக்கை மேற்கொண்ட நாளில் இருந்து 6 மாதங்களுக்குள் நிர்மாணவேலை பூர்த்தி செய்யப்பட வேண்டும். எனினும், ஒப்பந்தக்காரரின் செயலாற்றுகை குறைந்த மட்டத்தில் காணப்பட்டதால் இந்த நிர்மாணவேலை 2016 மே 30 திகதி வரை 05 சந்தர்ப்பங்களில் கால நீடிப்பு செய்யப்பட்டிருந்தது. அதே போல் ரூபா 2,554,698 தொகைக்கான செயலாற்றுகை முறியின் செல்லுபடியாகும் கால எல்லை முடிவடைந்திருந்த போதிலும் அதனை கால நீடிப்பு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 2005 இன் 03 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் III ஆம் பிரிவின் பிரகாரம் (2007 இன் 13 ஆம் இலக்கம் மற்றும் 2009 இன் 18 ஆம் இலக்க நிதித் திருத்திய சட்டங்களினால் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் கீழ்) ஒப்பந்தக்காரருக்கு செலுத்தியிருந்த ரூபா 20,646,905 தொகைக்கான கைத்தொழில் சான்றிதழ் நிதி வரி (CIGFL) ஆக ரூபா 51,617 தொகையினை தடுத்து வைத்து உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

### 3.5.2 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையக் கட்டிடம் நிர்மாணித்தல்

பிரதேச சபையின் திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையக் கட்டிடம் ஒன்று நிர்மாணிப்பதற்காக ரூபா 324,530 ஒப்பந்த பெறுமதியில் 2011 ஜூலை 25 திகதி சனசமூக சங்கம் ஒன்றுடன் உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 3.9.1 இன் பிரிவின் பிரகாரம் சாட்டப்பட்டுள்ள ஒப்பந்த வேலை உப ஒப்பந்தம் வழங்கப்படக் கூடாது. எனினும், உப ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு தாமதம் காரணமாக அவரினால் பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த கடிதத்தின் பிரகாரம் இந்த நிர்மாணவேலை சங்கத்தினால் உப ஒப்பந்தக்காரருக்கு சாட்டப்பட்டிருந்ததென உறுதிப்படுத்தப்பட்டது.

(ஆ) அளவை பத்திரத்தின் பிரகாரம் இந்த கட்டிடத்திற்கான 06 கொங்கிரீட் தூண்கள் செய்யப்பட்டு தரைக்கு கொங்கிரீட் பரப்பப்பட்டு (Angel Iron) இரும்புக் குழாய்களின் மூலம் கூரை செய்யப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அதன் கூரை வேயப்படாமையால் கூரையின் இரும்பு குழாய்கள் துருப்பிடித்து காணப்பட்டது என 2016 ஆகஸ்ட் 02 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

## 3.6 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி**

சபையில் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பதவியணியின் வகை | அங்கீகரிக்கப் பட்ட எண்ணிக்கை | உள்ளவாறான எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|
| சாரதிகள் | 06 | 08 | 02 |
| அலுவலக உதவியாளர்கள் | 03 | 04 | 01 |
| காவலாளிகள் | 03 | 06 | 03 |
| சுகாதார தொழிலாளர்கள் | 12 | 13 | 01 |
| நூலக சேவை உதவியாளர்கள் | 02 | 03 | 01 |
| | 26 | 34 | 08 |

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட அவதானம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் | கவனம் செலுத்த வேண்டிய பரப்புகள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) கணக்குப் பதிவு<br>(ii) துணைப் பதிவேடு பேணல் |
| (ஆ) | வருமான நிருவாகம் | நிலுவை வருமானம் அறவீடு செய்தல் |
| (இ) | நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) சொத்துப் பதிவேடு பேணல்<br>(ii) பயன்படுத்தப்படாத சொத்துக்கள் வினைதிறனான விடயங்களில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்தல். |
| (ஈ) | ஒப்பந்த நிருவாகம் | (i) ஒப்பந்த வரி செலுத்துதல்<br>(ii) உடன்படிக்கைக்கு இணங்க கருமங்கள் மேற்கொள்ளல். |
| (உ) | மனித வள முகாமைத்துவம் | மிகையாக ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்தமை. |